# சமூகத்தில் வெளிநாட்டுத் தலையீடு

வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்துவரும் பயமுறுத்தல்கள், மிரட்டல்களை எவ்வாறு அறிவிப்பது

FACTSHEET / March 2023

afp.gov.au

## அறிமுகம்

வெளிநாட்டுத் தலையீடானது, ஆஸ்திரேலிய மக்கள், இறைமை மற்றும் பாதுகாப்பு அத்துடன் எமது தேசிய நிறுவனங்களின் ஒருமைப்பாட்டுக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலை குறிப்பிட்டுக் காட்டுகிறது. வெளிநாட்டுத் தலையீட்டின் பயமுறுத்தல் ஆஸ்திரேலிய சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு மட்டுப்படுத்தப்படவுமில்லை அல்லது ஒரு தனியான தேசிய அரசினால் தீங்குவிளைவிக்கும் செயல் செய்யப்படவுமில்லை. அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும்; ஜனநாயக நிறுவனங்கள்; கல்வி மற்றும் ஆராய்ச்சி; ஊடகம் மற்றும் தொலைத்தொடர்புகள்; முக்கியமான உள்கட்டமைப்புகள்; அத்துடன் முக்கியமாக எமது கலாசார, மொழிரீதியாக மாறுபட்ட பல்வேறு CALD (கலாசாரம், மொழி ரீதியாக வேறுபட்ட) சமூகங்கள் உள்ளடங்கலாக அத்தனை பல்வேறு துறைகள் இருக்கும் ஆஸ்திரேலியாவுக்கான தீர்மானங்களை மேற்கொள்வோருடன் விரோதமான வெளிநாட்டு வேஷதாரிகள் ( ஏனைய நாடுகளுக்கு எதிராக விரோதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகள்) தலையீடுசெய்வதற்கு சந்தர்ப்பங்களை உருவாக்கியும், அவர்களைப் பின்தொடர்ந்துகொண்டும் இருக்கிறார்கள்.

## சமூகத்தில் வெளி நாட்டுத் தலையீடு

சமூகத்தில் வெளிநாட்டுத் தலையீடானது, வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழிநடத்தப்படும், மேற்பார்வைசெய்யப்படும் அல்லது நிதியுதவியளிக்கப்படும் அச்சுறுத்தல்களும், பயமுறுத்தல்களுமாகுமென வரையறுக்கப்படுவதுடன், ஆஸ்திரேலியாவின் பல்கலாசார வாழ்க்கை முறைக்குத் தீங்கு மற்றும் பாதிப்பை உண்டுபண்ணுவதற்காக CALD சமூகங்களை நோக்கிக் குறிவைக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டு அரசாங்கங்கள் சமூகங்களில் தலையீடு செய்யக்கூடும்:

- வெளி நாட்டு அரசாங்கங்களின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகள் குறித்த விமரிசனங்களை மௌனிக்கச்செய்தல்
- CALD குழுக்களின் உறுப்பினர்களின் (ஒஃப் லைன், ஆன்லைன்) செயற்பாடுகளைக் கண்காணித்தல்

- வெளிநாட்டு அரசாங்கங்களின் கருத்துக்கள் மற்றும் கொள்கைகளை ஊக்குவித்தல்
- வெளி நாட்டு அரசாங்கங்களின் நன்மைக்காகத் தகவல்களைப் பெறுதல்
- கரையோர மக்களின் கருத்துக்கள், எண்ணங்களில் செல்வாக்குச் செலுத்துதல்

## சமூகத்தில் வெளி நாட்டின் தலையீடு பல வடிவங்களை எடுக்கலாம்

அவற்றுள் அடங்குபவை:

- தாக்குதல் அல்லது தாக்குவதாகப் பயமுறுத்துதல்
- அச்சுறுத்திப் பணம் பறித்தல்
- ஆட்கடத்தல், சட்டவிரோத தடுத்துவைப்பு அல்லது சுதந்திரத்தைப் பறித்தல்
- பின்தொடர்தல், வேண்டடத்தகாத உடல் அல்லது மின்னணுசார்ந்த கண்காணிப்பு
- அடிபணியச்செய்வதற்காக வற்புறுத்துவதற்கு அச்சுறுத்தி அவரின் குடும்பம் அல்லது வெளி நாட்டிலிருக்கும் அவரின் கூட்டாளிகளைப் பலவந்தப்படுத்துதல்
- தனிப்பட்டவரை அல்லது குழுவினரை அவமானப்படுத்துவதற்காக சமூக ஊடகம் ஊடாக மெய்நிகரில் (ஆன்லைன்) தவறான தகவல் பிரசார இயக்கம்.

முக்கியமாக, குற்றவியல் கோவை சட்டம் 1995 (Cth)- இன் கீழ் வெளி நாட்டுத் தலையீட்டை உருவாக்குவதற்கு வெளிநாட்டு அரசாங்க அல்லது அதனுடைய பிரதிநிதியுடன் இந்த செயற்பாடு தொடர்புபட்டிருக்கவேண்டும். குற்றத்தன்மையை மதிப்பிடுவதில், ஆஸ்திரேலிய மாநில அல்லது பிரதேச குற்றச்செயல்களையும் சட்டத்தையும் அமுல்படுத்தும் முகவர்கள் கருத்துக்குஎடுத்துக்கொள்வார்கள்.

## யார் குறிவைக்கப்படுகிறார்கள்?

வெளி நாட்டு அரசாங்கங்கள் ஒருவேளை பின்வருவனவற்றைக் குறிவைக்கலாம்:

- ஆஸ்திரேலியாவில் வசிக்கும் முன்னைய அல்லது தற்போதய அயல் நாட்டைச்சேர்ந்தவர்கள்.
- அரசியல் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள்
- கருத்துவேறுபாடு கொண்டவர்கள்
- பத்திரிகையாளர்கள்
- அரசியல் எதிரிகள்
- சமயம் அல்லது சிறுபான்மையினக் குழுக்கள்

## உதவுவதற்கு நான் என்ன செய்ய முடியும்?

சமூகத்தில் வெளிநாட்டுத்தலையீடு குறித்த எல்லாத்தகவல்களுக்கும் ஒரு வெளிப்படையான AFP பதிலை வெளியிடாமல் விட்டாலும், ஒவ்வொரு அறிவிப்பும், உருவாகும் பிரச்சினைகள் குறித்த ஒரு படத்தைத் தோற்றுவிக்க உதவுகிறது

சமூகத்தில் வெளி நாட்டுத் தலையீடு குறித்த ஏதேனும் கரிசனைகள் மற்றும்/அல்லது சம்பவங்களைத் **தேசிய பாதுகாப்பு அவசர இணைப்புக்கு** (**National Security Hotline (NSH)**) அறிவிக்கலாம்.

- NSH ஒரு நாளில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் பணியாற்றுகிறார்கள். அத்துடன் இது சமூகத்தில் சாத்தியப்படக்கூடிய வெளி நாட்டுத்தலையீடு பற்றிய கவலைகளை அறிவிப்பதற்கு தொடர்புகொள்ளவேண்டிய மத்திய நிலையமாகும்.
- நீங்கள் கொடுக்கும் தகவல்களைக்கொண்டு என்ன செய்யவேண்டுமென்பது NSH ஐ இயக்குபவர்களுக்குத் தெரியும், தேவைப்பட்டால் மதிப்பீட்டிற்காக சட்டத்தை வலியுறுத்தும் மற்றும் பாதுகாப்பு முகவர்களுக்கு இதனை அனுப்புவார்கள்.
- NSH இயக்குநர்கள் ஒவ்வொரு தொலைபேசி அழைப்பையும் அக்கறையுடன் ஏற்றுக்கொள்வதுடன், பெற்றுக்கொள்ளும் முழுத்தகவல்களையும் பெறுமதியுடையவையாக மதிக்கிறார்கள்.
- அக்கறையுடைய விடயமொன்றினை அறிவிப்பது என்பது ஒரு பெரிய நடவடிக்கையாகுமென்பது எமக்குத் தெரியும். தங்களுடைய தனிப்பட்ட தகவலைப் பாதுகாக்க உங்களுக்குள்ள உரிமையை நாம் கடுமையாக எடுத்துக்கொள்கிறோம். உங்களின் பெயரைக் குறிப்பிட நீங்கள் விரும்பாதுவிட்டால், தயவுசெய்து அதனை இயக்குநரிடம் சொல்லவும்.
- தகவலின் தன்மை ஊறுபாட்டை ஏற்படுத்தக்கூடியதன் காரணமாக, உங்களின் தொலைபேசி அழைப்பு அல்லது மின்னஞ்சலினால் ஏற்பட்ட பலாபலன் பற்றிய தகவலை நீங்கள் பெற்றுக்கொள்ளமாட்டீர்கள்.

நீங்கள் கொடுக்கும் தகவல், சமூகத்தில் வெளிநாட்டுத்தலையீட்டை தடுப்பதற்கு உதவும்முகமாக AFPக்குத் தேவைப்படும், தவறவிடப்பட்ட ஒருவிடயமாகவும் அமையலாம்.

**NSH** ஐத் தொடர்புகொள்ளப் பல வழிகள் இருக்கின்றன**:**

- **தொலைபேசி: 1800 123 400**
  - ஆஸ்திரேலியாவுக்கு வெளியிலிருந்து: (+61) 1300 123 401
  - TTY பாவனையாளர்களுக்கு (செவிப்புலன் பாதிக்கப்பட்ட பாவனையாளர்கள்): 1800 234 889

- **உங்களுக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450- இல் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவையை அழைத்துத் தேசிய பாதுகாப்பு அவசர இணைப்பை (National Security Hotline) கூப்பிடுமாறு அவர்களைக் கேளுங்கள்**

- **குறும்செய்தி (SMS)**
  - தயவுசெய்து உங்களின் தகவல்களை உரை-செய்தி(text message) வழியாக 0429 771 822-க்கு அனுப்பவும்.
- **மின்னஞ்சல்**:
  - தயவுசெய்து உங்கள் தகவல்களை மின்னஞ்சல் வழியாக hotline@nationalsecurity.gov.au-க்கு அனுப்பவும்.
- **தபால்:**
  - பின்வரும் விலாசத்துக்கு உங்கள் தகவலை தபாலில் அனுப்பவும்:

    National Security Hotline
    Department of Home Affairs
    PO Box 25
    Belconnen ACT 2616

## அறிவிப்பதற்கான வேறு வழிகள்

பொருத்தமான வேளைகளில், வேறு பல வழிகளிலும் உங்களின் கரிசனைகளை நீங்கள் அறிவிக்கலாம்.

- பாரதூரமான மெய்நிகர் (online) துஸ்பிரயோக உள்ளடக்கத்தை அகற்றுவதற்கு eSafety உதவுகிறது. esafety.gov.au/report- இல் eSafety ஆணையாளருக்கு பாரதூரமான மெய்நிகர் துஸ்பிரயோகத்தை நீங்கள் அறிவிக்கலாம்.
- எந்த வழியிலாவது **பயமுறுத்தப்படுவதாக அல்லது பாதுகாப்பற்றதாக** நீங்கள் உணர்ந்தால், நீங்கள் பின்வருவோரைத் தொடர்புகொள்ளலாம்:
  - **காவல்துறை (பொலிஸ்) - உடனடி பயமுறுத்தல்களுக்கு 000- இல் அழைக்கவும்**
  - **காவல்துறை (பொலிஸ்) – உயிருக்கு அச்சுறுத்தலற்ற சம்பவங்களில் பொலிசாரின் வருகைக்காக 13 14 44-இல் அழைக்கவும்**
- forms.afp.gov.au/online_forms/report_a_crime.-இல் பொதுநலவாயக்குற்றச்செயலை நீங்கள் AFP க்கு பொதுநலவாய குற்ற அறிவிப்பு (Report a Commonwealth Crime) படிவத்தில் மெய்நிகர் (online) வழியாக அறிவிக்கலாம். ஒரு பொதநலவாயக்குற்றம் எதனால் உருவாகிறது என்பதுபற்றிய அதிக தகவல்களுக்கு, தயவுசெய்து afp.gov.au/contact-us/report-commonwealth-crime#What-is-a-Commonwealth-crime-ஐப் பாருங்கள்.

- சந்தேகப்படும் வேவுபார்த்தல் அல்லது வெளிநாட்டுத் தலையீட்டுச் செயற்பாடுகளை, சமூகத்தின் எந்தவொரு உறுப்பினரும் நேரடியாக AFP-இன் உறுப்பினர் ஒருவருடன் (AFP-இன் சமூக ஒருங்கிணைப்பு குழு உட்பட) பேசுவதன்மூலம் அறிவிக்கலாம்.

## சமூகத்தில் வெளிநாட்டுத் தலையீட்டை அறிவிப்பதன் மூலம் நான் எதனை எதிர்பார்க்கலாம்?

சமூகத்திலுள்ள வெளிநாட்டு தலையீடு பற்றிய ஒவ்வொரு அறிக்கையையும் AFP விசாரிக்கமுடியாது. ஏதேனும் குற்ற சாட்டுதலை அடையாளம்காணலாமா என்பதைத் தீர்மானிப்பதற்கு NSH-க்கு வரும் ஒவ்வொரு தொலைபேசி அழைப்பும் அல்லது குற்ற அறிக்கையும் தனித்தனியாக (case by case) என்ற அடிப்படையில் மதிப்பீடுசெய்யப்படுகிறது. அறிவிப்பின் பலாபலன்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பொலிசார் நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய சட்டரீதியான முதற்கட்ட அம்சங்கள் இல்லாதபடியால், ஒரு பதிலும் இருக்கமுடியாது
- ஒருவேளை, AFP விசாரிக்கலாம்
- அந்த விடயத்தை இன்னொரு பொலிஸ் சேவை அல்லது அரசாங்க அதிகாரி கையாளலாம்

ஆஸ்திரேலியாவுக்கு வெளியில் இடம்பெறும் குற்றங்களுக்கு, நியாயாதிக்க வரம்புகள் பிரயோகிக்கப்படும்

## பயமுறுத்தல்களின் வகைகள்

### நேருக்கு நேராக உங்களைப் பயமுறுத்தினால்

- அச்சுறுத்தலை அது  தெரிவிக்கப்பட்டதுபோலச் சரியாக எழுதிவையுங்கள் அல்லது பதிவுசெய்யுங்கள்.
- அச்சுறுத்தலை ஏற்படுத்திய ஆளைப்பற்றி  விரிவானமுறையில்  விபரங்கள் அனைத்தையும் பதிவுசெய்யுங்கள்(பெயர், பால், உயரம், நிறை, முடி மற்றும் கண்ணின் நிறம், குரல், உடை, அல்லது வேறுபடுத்திக்காட்டும் தோற்றங்கள் வேறு ஏதேனும்)
- அந்த அச்சுறுத்தலைப் பொலிசாருக்கு (காவல்துறை) அறிவியுங்கள்

### தொலைபேசியில் உங்களைப் பயமுறுத்தினால்

- சாத்தியப்படுமானால், அருகில் இருப்போரைக் கவனமாகக் காதால் கேட்டு, பொலிசாருக்கு அறிவிக்குமாறு  சைகைமூலம் தெரிவியுங்கள்
- சாத்தியப்படுமானால், தொலைபேசி அழைப்பினைப் பதிவுசெய்யுங்கள்
- அச்சுறுத்தலின் சரியான சொற்பிரயோகத்தை எழுதிவையுங்கள்

- தொலைபேசியிலிருக்கும் மின்னணு காட்சிமுறையைக் கொண்டு ஏதேனும் தகவலைப் பிரதிசெய்யுங்கள்.
- பொலிசாருடன் விபரங்களைக் கலந்துரையாடுவதற்குச் சமூகமளிக்கக்கூடியவகையில் இருங்கள்

## உரை செய்தி (text message), நேரடி/தனிப்பட்ட செய்தி, சமூக ஊடகம் அல்லது மின்னஞ்சல் போன்றவை உட்பட மின்னியல் வழியாக நீங்கள் பயமுறுத்தப்பட்டால்

- அந்தத் ததகவல்களை நீக்கவேண்டாம்
- அச்சுப்பிரதி, புகைப்படம், திரைப்படம் (screenshot), எடுக்கவும் அல்லது அந்த தகவல் செய்தியைப் பிரதிசெய்யவும் (தலையங்கம், திகதி, நேரம், அனுப்பியவர் போன்றவை). தற்காலிகமாகஇருக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்ட செய்திகளைச் சேகரிப்பதையும் அல்லது screenshot எடுப்பதையும் நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.
- உங்களுக்கு ஓர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை உடனடியாகப் பொலிசாருக்கு அறிவிக்கவும்
- சகல மின்னியல்சார்ந்த சான்றுகளையும் பாதுகாக்கவும்.

**இந்த வகைகளிலான பயமுறுத்தல்களிலிருந்து உங்களைப் பாதுகாக்க, கீழே தரப்பட்டுள்ள உதவிக்குறிப்புகளைப் பின்பற்றவும்:**

- அறியாதோர் அனுப்பும் மின்னஞ்சல், செய்திகள், அல்லது இணைப்புகளைத் திறக்காதீர்கள்
- தெரியாத அல்லது விரும்பாத தனிப்பட்டவர்களுடன் சமூக ஊடகத்தில் தொடர்புகொள்ள வேண்டாம்
- உங்களுடைய கருவி/கணக்குகளில் பாதுகாப்பு அமைப்பு அதிகூடிய பாதுகாப்பு அளவினைக் கொண்டிருப்பதை உறுதிசெய்யவும்.
- சைபர் குற்றவாளிகள் உங்களின் மின் சாதனங்களை விட்டுக்கொடுக்கும் நிலைப்பாட்டுக்கு வரலாம் அத்துடன் உங்களின் தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தலாம்.
- அடையாளத் திருட்டிலிருந்து உங்களின் கணக்குகளைப் பாதுகாக்க உடனடியாக உங்களின் நிதி நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளவும்.
- கடுமையான கடவுச்சொற்றொடர் (passphrases) களைப் பாவியுங்கள் அத்துடன் பல்வேறு இணையத்தளங்களுக்கு ஒரே கடவுச் சொற்றொடரைப் பாவிக்கவேண்டாம்
- வைரசு-எதிர்ப்பி மற்றும் தீங்கு-எதிர்ப்பி போன்றவற்றிற்கான பிரயோகங்கள் புதுப்பிக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- வேண்டப்பட்டவாறு அமைப்பு மற்றும் மென்பொருள் போன்றவற்றிற்கான புதுப்பித்தல்களைப் பிரயோகிக்கவும்.
- இரண்டு- காரணி உறுதிப்படுத்தலை (two-factor authentication) பிரயோகியுங்கள்.
- தவறாது தகவல்களை சேகரித்துவையுங்கள்
- உங்கள் கையடக்க தொலைபேசியைப் பாதுகாக்கவும்
- உங்களின் சைபர் பாதுகாப்பு சிந்தனை மற்றும் அறிவினை அபிவிருத்தி செய்யவும்.
- மேலும் தகவல்களைப்பெற்றுக்கொள்ள, cyber.gov.au.-ஐப் பாருங்கள்